**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 3, Issue - 1, November 2023** **E-ISSN: 2583-0481**

# Reflections of Animal Behaviour in Sangam Literature

**Dr. N. Kumari,** Assistant Professor of Tamil, Auxilium College, Katpadi, Vellore, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-7889-6164**
**DOI: 10.5281/zenodo.10389501**
**Received:** 29 July 2023; **Revised:** 17 August 2023; **Accepted:** 30 August 2023; **Available online:** 26 November 2023.

## Abstract

*According to the concept of anthropology, man gets life education from the environment in which he lives. The knowledge acquired through his life experiences determines how to relate to nature. The knowledge and behaviour of the body were derived from animals. Culture is related to the anthropological concept of learning Man learns various techniques from the external world around him to enrich his culture and develop civilization. Among them, animal behaviour is said to have made many contributions. In Tamil Sangam literature, many verses indicate animal behaviour in a catchy manner. They evince the noble and animal instincts of the animals in the Tamil Landscapes. So, the purpose of this article is to study animal behaviour patterns associated with Sangam literature. Man learns various techniques of life and ethical codes from animals. Among them, animal behaviour is said to have made many contributions to the enrichment of the psychology of mankind. The Tamil poets of the Sangam era depicted them in lucidness. Thus, the purpose of this article is to study animal behaviour patterns in Sangam Literature.*

**Keywords:** Sangam Literature, Reflection, Animal Behaviour.

**References**
[1] Alice, A. *Pathitru Pathu*. New Century Book House, Chennai, 2007.
[2] Jeyapaul. R. *Akananooru*. New Century Book House, Chennai, 2007.
[3] Somasundaranar, P.V. *Kurundogai*. Tirunelveli Thenninthiya Saiva Siddhantam Norpathippu Kazhagam, Chennai, 2007.
[4] Viswanathan, *Kalithogai*. New Century Book House, Chennai, 2007
[5] Bhaktavachal Bharati, C. *Panpatu Manidaviyal*. Manivaskar Pathipagam, Chennai, 1990.
[6] Ravichandran, D. K. *Freud, Jung, Lacan Arimugamum Nerimugamum*. Adayalam Pathipagam, Puddhanatham, 2007.
[7] Balasubramanian, K.V. *Natrinai Mulamum Uraium*, New Century Book House, Chennai, 2007.
[8] Dr. K. Mohan Gandhi. "Sangam Ilakkiyathil Ariviyal Sinthanaigal." *Peyal*, ISSN: 2394-0948, October 2020.
[9] P. Maheshwari. "Sangam Ilakkiyathil Paravaigal Vilangugal." *Shanlax International Journal*, ISSN: 2321-788X, August 2023.
[10] Mohanapriya. "Sangam Ilakkiyathil Maan." *Aazhi International Journal of Tamil Literature*, ISSN: 2583 - 7932, June 2023.
[11] K. Kavitha. "Sanga Ilakkiya Mullai Thinai Makkalin Panpugal." *Puthiya Aviyam*, ISSN: 2456-821X, March 2023.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

மலர் - 3, இதழ் - 1, கார்த்திகை 2054 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# சங்க இலக்கியத்தில் விலங்கின நடத்தைமுறைப் பிரதிபலிப்புகள்

**முனைவர் நா. குமாரி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அக்சிலியம் கல்லூரி, வேலூர், தமிழ்நாடு, இந்தியா.

**ORCiD: https://orcid.org/0000-0002-7889-6164**

**DOI: 10.5281/zenodo.10389501**

**ஆய்வுச்சுருக்கம்**

*மனிதன் தான் வாழும் சுற்றுச்சூழலிலிருந்து வாழ்க்கைக் கல்வி பெறுகின்றான் என்பது மானிடவியலின் கருத்தாகும். இயற்கையோடு எவ்வாறு உறவு கொள்வது என்பதை அவனது வாழ்வியல் அனுபவங்களின் மூலம் பெற்ற அறிவு தீர்மானிக்கின்றது. இந்த அறிவு தொகுதியின் ஒரு பகுதி விலங்கினங்களிடமிருந்து பெற்றது என்பது வெளிப்படை. பண்பாடு என்பது கற்றுணரப்படுவது என்பது மானிடவியலின் கருத்தாகும். மனிதன் தனது பண்பாட்டை வளப்படுத்தவும் நாகரீக வளர்ச்சி பெறவும் தன்னைச் சுற்றியுள்ள புறவயமான உலகத்திலிருந்து பல்வேறு நுட்பங்களைக் கற்றுக் கொள்கின்றான். அவற்றுள் விலங்கினங்களின் நடத்தை முறை ஏராளமான பங்களிப்புகளைச் செய்துள்ளது என்று சொல்லப்படுகின்றது. அவ்வகையில் சங்க இலக்கியத்தில் விலங்கின நடத்தை முறைப் பிரதிபலிப்புகள் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**குறிப்புச் சொற்கள்:** சங்க இலக்கியம், பிரதிபலிப்பு, விலங்கினங்களின் நடத்தை.

**முன்னுரை**

மனித சமூகம் இயற்கையிடமிருந்து எண்ணற்ற நடத்தை முறைகளை நேரடியாகவும், மறைமுகமாகவும் பெற்றுள்ளது என்பது பொதுவான உண்மை. விலங்கினங்கள் மனித சமூகத்தோடு நெருக்கமான உறவு உடையவை. ஆதிகால மனிதன் முதல் தற்கால மனிதன் வரையிலான மனித சமூகம் விலங்கினங்களைத் தனது வாழ்வியலோடு ஏதோ ஒரு வகையில் பிணைத்துள்ளது. விலங்கினங்களின் நடத்தை முறைகள் மனித சமூகத்தால் தொடர்ந்து கூர்ந்து நோக்கப்படுகின்றது என்பதை வழக்கில் உள்ள வழக்காடுகளின் வழி அறியலாம்.

**விலங்குகளின் நடத்தை முறைகள்**

விலங்குகளின் நடத்தை முறைகள் உற்று நோக்கப்பட்டு அவை மனித சமூகத்தின் அறிவுத்தொகுதிக்குள் சேர்க்கப்பட்டுள்ளன. "உயர உயர பறந்தாலும் ஊர் குருவி பருந்தாகுமா?", "புலி பசித்தாலும் புல் தின்னாது", "இந்த பூனையும் பால் குடிக்குமா?" விலங்கினங்களின் நடத்தை முறைகள், மனித நடத்தை முறைகளை அல்லது இயல்புகளை ஒப்பிட்டு காட்டவும் அறிவுறுத்தவும் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதற்கு இங்கு சூட்டப்பட்ட பழமொழிகள் சான்றாக அமையும். ஊர்க்குருவி உயர உயர பறந்தாலும் பருந்தாகி விட முடியாது என்பது ஊர்க் குருவியின் நடத்தை முறையோடு மட்டும் நின்று விடுவதில்லை.

ஒருவர் தன் தகுதிக்கு மேல் எவ்வளவு தான் உயர்வானவராகக் காட்டிக் கொண்டாலும் அவரது சமூகத் தகுதி மாறி விடுவதில்லை. சாதிய அடுக்கமைவின் மரபு வழிப்பட்ட தகுதி என்பது நிலையானது. ஒருவர் மற்றொருவரை போல் நடந்து கொண்டாலும் அவர் அவராகவே இருப்பார் என பல பொருண்மைகள் இப்பழமொழிக்கு உண்டு. ஊர் குருவியின் நடத்தை முறையின் மூலம் பெறப்பட்ட அறிவு இங்கு மனித நடத்தை முறைகளை அளவீடு செய்வதாக அல்லது மதிப்பீடு செய்வதாக அல்லது ஒப்புமைப்படுத்தப்படுவதாக அமைவதைக் காணலாம். இவ்வாறாக, அசை உயிர்களின் நடத்தை முறைகளின் மூலம் பெறப்பட்ட அறிவு மனித நடத்தை முறைகளை மதிப்பீடு செய்வதாகவோ அல்லது ஒப்புமை படுத்துவதாகவோ அமைவதையே பிரதிபலித்தல் எனக் கூறப்படுகின்றது.

> **இயற்கையை உற்று நோக்குவதன் மூலம் அல்லது இயற்கையோடு கொள்ளும் உறவின் மூலம் பிரதிபலிக்கப்படும் அனுபவம் சமூக அறிவாக அல்லது அறிதல் சார் அறிவாக பரிணமிக்கின்றன. (க. மோகன் காந்தி, பக். 46)**

தன்னைச் சுற்றியுள்ளப் பொருட்கள் ஒவ்வொன்றையும் மனிதன் தன் அறிவுக்கு உட்படுத்துகின்றான். இந்த அறிவே இயற்கையோடு கொள்ளும் உறவிற்கு அவனுக்கு அடிப்படையாக அமைகின்றது. தீ சுடும் என்பது வெறும் வார்த்தை அன்று. ஆதி மனிதன் முதல் தற்கால மனிதன் வரை முதன்முதலாக நெருப்பை உணர்ந்த போது கிடைத்த தொடு உணர்ச்சி அனுபவம் இந்த வாக்கியத்தில் உள்ளது. இந்த அறிவைப் பிரதிபலிப்பதாகவே தீ என்ற சொல் வழங்கப்படுகின்றது.

**மூன்று நிலைகள்**

பிரதிபலித்தல் பண்பு, அளவு, வினை எனப் பல நிலைகள் சார்ந்ததாக அமையலாம். நடத்தை முறைக்கு இம்மூன்று நிலைகளும் பொருத்தமுடையவை. ஒரே நடத்தை முறையில் இம்மூன்று பண்புகளும் சேர்ந்தும் அமையலாம். மனிதச் சமூகத்தின் உற்று நோக்களில் ஒரு நடத்தை முறையில் எல்லா நிலைகளும் அல்லது பரிமாணங்களும் பிரதிபலிக்கப்படும் என்ற கட்டாயம் இல்லை. ஏதேனும், ஒரு நிலை அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட நிலைகள் பிரதிபலிக்கப் படலாம். இப்பிரதிபலிப்பு விலங்கினங்களின் நடத்தை முறைகளுக்கும் மனித நடத்தை முறைகளுக்கும் இடையேயுள்ள ஒப்புமை அல்லது வேற்றுமையின் அடிப்படையில் அமையும். பெரும்பாலும் இந்த ஒற்றுமை அல்லது வேற்றுமைகள் உவமை, உருவகம், உள்ளுறை, இறைச்சி போன்ற உத்திகளின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன. எட்டுத்தொகை நூல்களில் இவ்வகையிலான பிரதிபலிப்புகள் ஏராளம் பதிவாகியுள்ளன. அவற்றை இங்கு வகைத்தொகை செய்து காணலாம்.

**எட்டுத்தொகை நூல்களில் பிரதிபலித்தல்**

எட்டுத்தொகை நூல்களில் பதிவாகியுள்ள பிரதிபலித்தல் தொடர்பான பதிவுகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை 1. ஒப்புமை பிரதிபலிப்பு, 2. குறியீட்டு பிரதிபலிப்பு, 3. தூண்டல் பிரதிபலிப்பு என்பனவாகும். இவற்றுள் தூண்டல் பிரதிபலிப்புகளின் வழி

விலங்கினங்களின் நடத்தை முறைகள் மனிதனின் நடத்தை முறைகளில் எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதை குறித்து விளக்குவது கட்டுரை நோக்கமாகும்.

அசையுயிர்களின் நடத்தை முறைகளை உற்று நோக்குவதால் மனிதன் தூண்டப்பட்டு அந்நடத்தை முறைகளைப் போல் தானும் நடந்து கொள்வது அல்லது நடந்து கொள்வான் என எதிர்பார்க்கப்படுகிறது தூண்டல் பிரதிபலிப்பாகும். அசையுயிர்களின் குறிப்பிட்ட சில நடத்தை முறைகள் குறிப்பிட்ட சூழல்களில் மனிதனும் அவ்வாறு நடந்து கொள்ளத் தூண்டப்படுவதே தூண்டல் பிரதிபலிப்பின் அடிப்படையாகும்.

**சங்க இலக்கியத்தில் ஆண் யானையை ஆண் மகனுக்கும், அன்னத்தை பெண்ணிற்கும், குரங்கின் விளையாட்டை பாவி மனக் குரங்காட்டத்திற்கும், ஆடும் மயில்களை அன்பு பெண்களுக்கும் ஒப்பிட்டு படைத்து காட்டுகின்றனர்.( ப. மகேஸ்வரி, பக். 135)**

**சங்க இலக்கியத்திற்கு அழகு சேர்க்கும் ஒரு விலங்கு மான் (செ. மோகனப்பிரியா, பக். 37)**

காட்டின் வழியில் செல்லும் தலைவன் ஆண் மான், பெண் மான் இரண்டும் கூடி இருப்பதைக் கண்டு விரைவில் வீடு திரும்பினான் என்பதை அகநானூறும் நற்றிணையும் குறிப்பிடுகின்றன. (அகம்., பா. 14, 129, 133, 139, நற்., பா. 69) ஆண் மான் பெண் மான் இரண்டும் கூடி இருப்பதை காணும் தலைவன் தனது தலைவியுடன் இருப்பதை நினைப்பான். (அகம்., பா. 74: 9, 10) முல்லைக் காட்டில் பெண்மானை தழுவிக்கொண்டு ஆண் மான் துள்ளித் திரியும் கார்பருவம் வந்தும் தலைவன் இன்னும் வரவில்லை எனத் தலைவி புலம்புதலை அகநானூறு கூறுகின்றது. (அகம்., பா. 314: 57) தன் பெண் பூனையின் பசியை போக்க ஆண் பூனை கோழி சேவலைப் பிடிக்கும் மழைக்காலம் வந்தும் தலைவன் வரவில்லை எனத் தலைவி வருந்துவதை அகநானூறு குறிப்பிடுகின்றது. (அகம்., பா. 367: 8, 10) மான் தன் துணையுடன் இருத்தலைக் கண்டு தானும் தன் தலைவியுடன் இதுபோலக் கூடி இன்புற முடியவில்லை என்று தலைவன் வருந்தும் நிகழ்வினை,

**மான்ஏறு மடப்பிணை தழீஇ, மருள் கூர்ந்து**
**கானம் நண்ணிய புதல் மறைந்து ஒடுங்கவும் (குறுந்., பா. 319: 1, 2)**

என்னும் குறுந்தொகை வரிகள் பதிவு செய்துள்ளது. ஆண்மானுடன் பெண் மான் இனமாகக் கூடிக் காட்டில் இருத்தல் போல தலைவனும் தலைவியும் இருத்தலைப் பதிற்றுப்பத்தின் வழி அறிய முடிகின்றது. (பதிற்., பா. 89: 5) நீரினைப் பிடி உண்ண வேண்டும் என்று களிறு உண்ணாது இருத்தல் போலத் தலைவன் தலைவியின் நினைவால் திரும்ப வருவான் என்பதை கலித்தொகையும் (11: 6, 9) களிறு தன் பிடியின் நோய் தீர்த்தல் போலத் தலைவன் தலைவிக்கு விரும்புவனவற்றையெல்லாம் செய்து கொடுத்து அவளது மனதின் வலியினை சரி செய்வான் என்று கலித்தொகை (40: பக். 26, 29) குறிப்பிடுகின்றன. காட்டுப் பசுவின் ஒற்றுமையைக் கண்டு தலைவன் மீண்டும் திரும்பி வருவான் என்று தோழி தலைவியிடம் கூறுவதாகக் குறுந்தொகையின் 363ஆம் பாடல் வரிகள் அமைந்துள்ளன.

மேற்குறித்த குறிப்புகள் உயிரினங்களின் இனப்பெருக்க சேர்க்கையைக் காட்சிப்படுத்தி அமைந்திருப்பதைக் காணலாம். இக்காட்சிகளைக் காணும் தலைவன் அல்லது தலைவி காம உணர்ச்சி பெறுவதாக இக்குறிப்புகள் உணர்த்துகின்றன. தலைவன் செல்லும் பாதையில் மான் யானை, பூனை போன்றவை தம் துணையுடன் இருத்தல் கண்டு தலைவன் தலைவியிடம் மீண்டும் வந்து சேர்வான் அல்லது அவை போல் தானும் தலைவியோடு சேர்ந்து மகிழ வேண்டும் என்ற உணர்வு தூண்டலைப் பெறுவான் என இக்குறிப்புகள் உணர்த்துகின்றன .

தலைவனுக்குக் காமம் பெருகியதை யானைக்கு மதம் பிடித்தலுடன் ஒப்பிட்டு குறுந்தொகை பேசுகின்றது. (136) காமம் மிகுதல் மதம் பிடித்தலுடன் ஒப்புப்படுத்தப்படுகின்றது தற்கால வழக்கிலும் காமம் மிகுதி கொண்டவர்களை மதம் பிடித்து அலைகின்றான் எனக் குறிப்பிடுவது இங்கு கவனத்தில் கொள்ளத்தகும். மதம் பிடித்த யானை இயல்பு நிலை பிறழ்ந்து செயல்படுவது போல காமம் மிகுதி பண்பாட்டு மீறல்களைக் குறித்து கவலை கொள்ளாது என்பது உட்பொருள் ஆகும். வல் முற்றிய பெரிய யானை மூங்கில் முளையைத் தின்றால் தனது வல்கெட்டு வருந்தும். அதுபோல நாணம் முதலியவற்றால் மேம்பட்ட தலைவி அன்பில்லாத காதலனை விரும்பினால் அலர் எழும் என்பதை அறியாமல் அவனுக்கு இசைந்ததால் அலர் எழுந்து தலைவியின் நலத்தைக் கெடுத்தது என்பதை நற்றிணையின்,

**வல்முதிர் மடப்பிடி, நாள் மேயல் ஆரும்**
**முலை கெழு நாடன் கேண்மை, பலவின் மாச்சினை துறந்த கோள் முதிர் பெரும்பழம்**
**விடர் அளை வீழ்ந்து உக்கா அங்கு, தொடர்பு அறச்**
**சேணும் சென்று உக்கன்றே; அறியாது**
**ஏ கல் அடுக்கத்து இருள் முகை இருந்த குறிஞ்சி நல் ஊர்ப்பெண்டிர்**
**இன்னும் ஓவார், என் திறத்து அலரே (நற்., பா. 116, பக். 512)**

என்னும் பாடல் வரிகள் விளக்குகின்றன. வல்யானை எவற்றை உண்ணக்கூடாது என்பதை அறியும். அவ்வாறு அறிந்தும் மூங்கில் முளையைத் தின்று வல் யானை வருந்துவது போல அன்பில்லாத் தலைவனுக்கு இணங்கியதால் தலைவி அலரினால் துன்புறுகின்றாள் என்பதை இப்பாடல் சுட்டிக்காட்டுகிறது. வலியானை அறிந்தும் உணவு கட்டுப்பாட்டை மீறுவது போல தலைவியும் மனக்கட்டுப்பாட்டை இழந்து விடுகின்றாள். தினைப் புனத்தை ஆண் யானைகள் தன் பெண் யானைகளுடன் இரவில் வந்து பயிரை உண்ண நிற்கும். கணவன் தினைப் புனத்தைக் காவல் காக்கும் பொருட்டு இரவில் ஆசினிப் பலாவின் மீது பரணமைத்து தங்கி இருப்பான். யானைகளின் காலடிச் சத்தம் கேட்டக் கணவன் பரணின் மீதேறி தனது கவணில் கல்லை வைத்து எறிந்தான். அதுபோல தலைவன் தலைவி இருவரும் புணர்ந்த நிலைமையை ஊரார் அலர் கூற செவிலி கடுஞ் சொல் கூறித் தலைவியை இற்செறிப்புச் செய்தாள் என்னும் செய்தியைக் கலித்தொகையின் வரிகளால் அறிய முடிகின்றது. (கலி., பா. 41, பக். 7)

ஆண் யானை பெண் யானையைத் தீண்டி இன்புறும் . வாழையை வெறுக்கும். சிறு குடி அலற பலாப்பழம் உண்ணும் என்பது தலைவன் இயற்கைப் புணர்ச்சியில் கூடியதும் பின்

களவினை வெறுத்ததும் அயற் பெண்டிர் கூறும் அலர் மொழி நீங்கி அவர்களின் வாய்மூட தலைவன் தலைவியை மணம் புரிந்து இல்லறம் நடத்துவதை நற்றிணையின் வழி அறிய முடிகின்றது. குறிஞ்சி நிலத்தில் வாழும் குரங்கு மனம் நடுங்குமாறு மந்தியும் அதன் குட்டியும் மலைப்பக்கம் இயங்கும் மேகத்தில் ஒளியும். அதுபோல தலைவன் வரும்போது தலைவியும் தோழியும் மறைந்து கொள்வார்கள். தலைவியைக் காணாது தலைவன் வருந்துவான். தலைவியும் தோழியும் மறைந்து கொண்டதால் தான் தலைவன் தலைவியை விரைவில் மணம் புரிவான் என்னும் மேற்குறித்த நற்றிணை பாடல் குறிப்பிடுகின்றது. (நற்., பா. 233; 15)

யானைக் கன்று மலைப்பக்கம் செல்லும்போது பசுக் கன்றுடன் சேர்ந்து புகும் என்பது தலைவன் பொருளுக்காகப் பிரியும்போது தலைவியைத் தோழி ஆற்றுவிப்பாள் (நற்., பா. 171: பக். 15). ஆனேறு பசுவினைத் தழுவிய வண்ணம் மாலைப்பொழுதில் வீடு வந்து சேரும் அதைக்கண்ட தலைவித் தன் தலைவன் வரவில்லையே என்று துன்புறுவாள் (அகம்., பா. 64: பக். 13-15). மாலைப்பொழுதினில் கன்றுகள் பசுக்களுக்காக ஏங்கி நிற்பதைப் போல தலைவியும் தலைவனின் வரவிற்காக ஏங்கி நிற்கிறாள். (குறுந்., பா. 64: பக். 14)

**ஆண் பல்லி பெண் பல்லியை அழைப்பதனைக் கேட்கும்போதாவது பொருளின் காரணமாக பிரிந்து சென்ற தலைவனுக்கு தன் நினைவு வருமா? என முல்லை நிலத் தலைவி ஏங்குகிறாள். (க. கவிதா, பக். 43 )**

தலைவன் தலைவியுடன் வாழும் வாழ்வும், அவனுக்காக தலைவி ஏங்கி காத்திருக்கும் இருப்பும், விரைவில் தலைவன் தலைவியை மணம் முடிக்க வேண்டும் என்ற நினைப்பும் குரங்கு, பசுக்கள், ஆனேறு, யானைகள் போன்ற விலங்குகளின் நடத்தை முறைகள் தலைவன் தலைவிக்குத் தூண்டுதலாக அமைவதை எட்டுத்தொகை இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. விலங்கின நடத்தையியல் என்பது மானிடவியலின் ஒரு பிரிவாகும்.

விலங்கின நடத்தை முறைகளைக் கொண்டு மனித சமூகத்தின் தோற்றத்தைக் கண்டறிய இப்புலம் முனைகின்றது. விலங்கினங்களின் நடத்தை முறைகளை அறிவதில் பல்வேறு துறையினர் ஆர்வம் கொண்டுள்ளனர். ஆயினும், உயர்பாலூட்டிகளின் நடத்தை முறைகளை அறிவதில் உடல்சார் மானிடவியலாரும் பண்பாட்டு மானிடவியலாளரும் பெரிதும் அக்கறை காட்டுகின்றனர். உயர் பாலூட்டிகளை அதன் இயற்கைச் சூழலிலும், விலங்கின பூங்காக்களிலும் ஆய்வுக்கூடங்களிலும் அல்லது பிற செயற்கைச் சூழலிலும் ஆய்வு செய்யும் முறை 1950, 60களில் அதன் உச்ச நிலைக்குச் சென்றது பெரும்பாலான ஆய்வுகள் அவை இயல்பாய்ச் சுற்றித் திரியும் காட்டுப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டன. இவ்வகை ஆய்வுகள் மூலம் உயர் பாலூட்டுகளின் சமுதாய வாழ்க்கை, உணவு, ஈட்டும் முறைகள், பால் சார்ந்த வாழ்க்கை, கருத்துப் புலப்படுத்தும் முறை வாழும் காட்டுப் பகுதிகளில் அவை கொண்டுள்ள ஆளுகை முறை, பல்வேறு செயல்களின்போது அவை வெளிப்படுத்தும் நடத்தை முறைகள் போன்ற பலவற்றைப் பற்றி அறிய முடிந்தது (பண்பாட்டு மானிடவியல், 87). விலங்கினங்களின் நடத்தை முறைகள் குறித்த ஆய்வுகளுக்கு விலங்கினங்களின்

வாழிடத்துக்குச் செல்ல வேண்டி உள்ளது. புதைப்பொருளாக கிடைக்கப்பெறும் விலங்கினங்களின் எலும்புகள் அவற்றின் நடத்தை முறைகளையும் உயிரியல் பண்புகளையும் அறிய பெரிதும் பயன்படுகிறது. ஆனால் ஏராளமான பதிவுகள் தொல்லியல் ஆவணங்களாக காணக்கிடக்கின்றன. விலங்கினங்களின் நடத்தை முறைகளைக் கொண்டு ஒரு குறிப்பிட்டச் சுற்றுச்சூழலில் வாழும் உயிரினங்கள் எவ்வாறு நடந்து கொள்ளும் என்பதை கண்டறிய பயன்படும். ஒரு குறிப்பிட்ட சமுதாய முறை உண்டாவதற்குச் சுற்றுச்சூழல் எவ்வகையில் பங்கு பெறுகிறது என்பதும், சமுதாய நடத்தையை உண்டாக்குவதில் சூழலியல் காரணிகள் எவ்வாறு பங்கு பெறுகின்றன என்பதும் பண்பாட்டு மானிடவியலாரின் முதன்மையான நோக்கங்களாகும். இவை தவிர ஒரு குறிப்பிட்ட குழுவிற்குள் இடம்பெறும் குழு நடவடிக்கைகள், ஆதிக்க விலங்குகள், ஒடுங்கி வாழும் விலங்குகள், அவற்றின் நடத்தை முறைகள் முதலானவற்றை ஆராய்வதும் இந்நோக்கங்களுள் அடங்கும். (பண்பாட்டு மானிடவியல், 87 - 88)

சமுதாய முறையின் தோற்றத்திற்குச் சுற்றுச்சூழல் முதன்மையான பங்கு வகிக்கிறது என்பதை சமுதாய உயிரியலாளரின் கருத்தாகும். உயிரியல் அறிவையும் சமுதாய பண்பாட்டு அறிவையும் இணைத்து பார்ப்பதின் மூலமே விலங்கினங்களுக்கும் மனித நடத்தை முறைகளுக்கும் இடையிலான உறவுகளைக் கண்டறிய இயலும். உயிரினங்களின் படிமலர்ச்சிக் குறித்து பேசிய டார்வினும் உயிரினங்களின் நடத்தை முறைகளைப் பெரிதும் பயன்படுத்தினார். விலங்கினங்களின் நடத்தை முறைக்கு உள்ளுணர்ச்சி அடிப்படையானது என டார்வின் கருதுகிறார். மற்ற உயிரினங்களைப் போல் மனித இனத்திற்கும் தனித்த நடத்தைகள் உண்டு. அவை உள்ளுணர்ச்சிகளோடு தொடர்புடையவை. ஃப்ராய்ட் இதை உள்வாங்கிக் கொண்டு உள்ளுணர்ச்சிகள் நடத்தைகளாக வெளியாவதை பகுப்பாய்வு செய்து விளக்கம் தருகிறார். டார்வினியம் போல், ஃப்ராய்டிய உளவியல் உள்ளுணர்ச்சி உளவியல் ஆகும். நாம் விலங்குகள் என்கிறார் டார்வின். நாம் விலங்குணர்ச்சிகளால் தீர்மானிக்கப்படுகிறோம் என்கிறார் ஃப்ராய்ட் (ஃப்ராய்ட் யூங் லக்கான் அறிமுகமும் நெறிமுகமும், 28). விலங்கினங்களின் உள்ளுணர்ச்சிகளே அவற்றின் நடத்தை முறைகளாக வெளிப்படுகின்றன என்பதை அறிவியலாளர்கள் பலரும் நிறுவியுள்ளனர்.

**முடிவுரை**

சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ள விலங்கினங்களின் பெரும்பான்மையான நடத்தை முறைகளும் உள்ளுணர்ச்சி சார்ந்ததையே. விலங்கினங்களின் இவ்வுள்ளுணர்ச்சியின் காரணமாக வெளிப்படும் நடத்தை முறைகளைக் காணும் தலைவன் அல்லது தலைவி உள்ளுணர்ச்சி தூண்டுதலுக்கு ஆளாகின்றனர் என்பதையே மேலேச் சுட்டப்பட்டுள்ள சங்க இலக்கிய குறிப்புகள் உணர்த்துகின்றன. விலங்கினங்களின் நடத்தை முறைகள் அகவாழ்வு சார்ந்த உணர்வுகளைத் தூண்டுவதாக இக்குறிப்புகள் அமைகின்றன. விலங்கினங்கள் வாழும் சூழலான குறிஞ்சி, முல்லை சார்ந்த விலங்கினங்களின் நடத்தை முறைகளே

பெரும்பான்மையாகப் பதிவாகியுள்ளன என்பதும்; குறிப்பிடத்தக்கது. யானை, மான், குரங்கு, பசு ஆகியவற்றின் உள்ளுணர்ச்சிகள் சார்ந்த நடத்தை முறைகள் சங்க இலக்கியத்தில் பெருமளவு பதிவாகியுள்ளன. சங்க இலக்கிய அக இலக்கிய மாந்தர்கள் இயற்கைச் சார்ந்த நடத்தை முறைகளின் தூண்டுதல்களை பெரிதும் பிரதிபலித்துள்ளனர். சங்ககாலச் சமுதாய உருவாக்கத்தில் விலங்கினங்களின் நடத்தை முறைகளுக்குக் குறிப்பிடத்தக்கப் பங்கு உள்ளது என்பதனை மேற்குறித்தக் கருத்துக்களின் அடிப்படையில் தெளியலாம்.

**குறிப்புகள்**

[1] ஆலிஸ். ஆ. *பதிற்றுப்பத்து.* நியூ சென்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.

[2] செயப்பால், ரா. *அகநானூறு.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.

[3] சோமசுந்தரனார். பொ.வே. *குறுந்தொகை.* திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்தம் நூற் பதிப்புக் கழகம், சென்னை, 2007.

[4] விசுவநாதன். *கலித்தொகை.* நியூ சென்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.

[5] பக்தவச்சல பாரதி, சீ. *பண்பாட்டு மானிடவியல்.* மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1990.

[6] ரவிச்சந்திரன், தி. கு. *ஃப்ராய்ட், யூங், லக்கான் அறிமுகமும் நெறிமுகமும்.* அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம், 2007.

[7] பாலசுப்பிரமணியன். கு.வெ. *நற்றிணை மூலமும் உரையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.

[8] முனைவர் க. மோகன் காந்தி. “சங்க இலக்கியத்தில் அறிவியல் சிந்தனைகள்.” *பெயல்,* ISSN: 2394- 0948, அக்டோபர் 2020.

[9] ப. மகேஸ்வரி. “சங்க இலக்கியங்களில் பறவைகள் விலங்குகள்.” *சான்லாக்ஸ் பன்னாட்டு ஆய்விதழ்,* ISSN: 2321-788X, ஆகஸ்ட் 2023.

[10] மோகனப்பிரியா. “சங்க இலக்கியத்தில் மான்.” *ஆழி சர்வதேச தமிழ் இலக்கிய ஆய்விதழ்,* ISSN: 2583-7932, ஜூன் 2023.

[11] க. கவிதா. “சங்க இலக்கிய முல்லைத் திணை மக்களின் பண்புகள்.” *புதிய அவையம்,* ISSN: 2456-821X, மார்ச் 2023.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.